## <u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.</u>

## <u>அசல் வழக்கு எண். 79/2021</u>

பெயர் : அறிவழகன் P.W.1. Cross continuation

த/பெ. : முருகையன்

தேதி : 16.03.2026

சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

**<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:</u> –**

1. 1ம் பிரதிவாதி எனது மாமா என்றால் சரிதான். எனது மாமா செல்வராஜின் வாரிசு 2ம் பிரதிவாதி என்றால் சரிதான். எனது மாமா கணபதியின் வாரிசுகள் 3, 4 பிரதிவாதிகள் என்றால் சரிதான். உயில் எழுதப்பட்ட காலத்தில் எனது பாட்டியும், எனது தாத்தாவுடன் எண். 3/220, ராஜாஜி தெரு, செம்பனார்கோவில் என்ற முகவரியில் வசித்து வந்தார் என்றால் சரிதான். உயில் எழுதப்பட்ட விபரம் எனக்கு 2009ம் ஆண்டு தெரியவந்தது என்ற விபரத்தை எனது வழக்குரையிலும், பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் மேற்படி விபரத்தை எனது வழக்குரையிலும், பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நோயுடன் பேராடிக்கொண்டிருப்பதாக எனது தாத்தா உயிலில் சொல்லியுள்ள விபரத்தை நான் எனது வழக்குரையிலும், பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. உயில் எழுதிவைத்த காலத்தில் எனது தாத்தா நல்ல நிலையில் தான் இருந்தார் என்றாலும், அதனால் எனக்கு உயில் எழுதி வைக்கவேண்டிய அவசியம் இல்லை என்றாலும் சரியல்ல.

2. எனது மகன் வயிற்று பேரன் அறிவழகனை 13 வயது வரையில் வாரிசு ஆக்கியபின் என் சுவீகாரத்தை எடுத்திருக்கிறேன். அதை உறுதிபடுத்திட சான்றிதழ் உண்டு என வாசாஆ 2 ஆன உயிலில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி விபரத்தை நான் எனது வழக்குரையிலும், பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. எனது தாத்தா என்னை சுவீகாரம் எடுத்துகொண்டதற்கான ஆவணத்தை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என் சவரட்சனையை பார்த்து என்னை கவனித்து வந்த என் மகள் செல்வாம்பாள் அவள் மகன் அறிவழகன் இருவரையும் என் சகல சொத்துக்களுக்கும் வாரிசு என்று உறுதி சங்கல்பம் செய்துகொண்டேன் என உயிலில் சொல்லப்பட்டுள்ளது

என்றால் சரிதான். மேற்படி விபரத்தை எனது வழக்குரையிலும், பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. அதற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வாசாஆ 2ல் தஞ்சை மாவட்டம் என 2 முறை எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

3. முனுசாமி செட்டியார் என்ற பெயரை செடடியார் என்பது திருத்தி எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி முனுசாமி செட்டியாரின் கையெழுத்து திருத்தி எழுதப்பட்டுள்ளது என்றாலும் , அதனால் முனுசாமி செட்டியாரின் கையெழுத்து போலியாக போடப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. வாசாஆ 2 ஆன ஆவணம் எந்த தேதியில் எழுதப்பட்டுள்ளது என்றால் தற்போது நினைவில் இல்லை. வாசாஆ 2 ஆன உயிலானது 15.03.1974 அன்று எழுதப்பட்டது என்றால் சரிதான். 15.04.1974 என வழக்குரையிலும், பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். முனுசாமி செட்டியாருக்கு மொத்தம் எத்தனை பிள்ளைகள் என்றால் 3 ஆண் பிள்ளைகளும், 2 பெண் பிள்ளைகளும் உள்ளார்கள். 2 பெண் வாரிசுகளின் பெயர்கள் செல்வாம்பாள் மற்றும் முருகாம்பாள் ஆகும். முருகாம்பாள் பற்றி எனது வழக்குரையிலும், பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான். உயில் எழுதப்பட்ட காலத்தில் எனக்கு 13 வயது என்பதால் எனக்கு கார்டியனாக யாரையாவது நியமனம் செய்து உயில் எழுதி வைத்தார்களா என்றால் இல்லை.

4. 1972ல் எனது தாத்தா எழுதிவைத்த பதிவு செய்யப்பட்ட உயில் ஆவணத்தின் பதிவெண் தெரியுமா என்றால் தெரியாது. எனது தாத்தா 1972ம் ஆண்டு எழுதிவைத்த உயில் தான் கடைசியாக எழுதிவைத்த உயில் என்றாலும், அதன் பிறகு எந்த உயிலும் எழுதவில்லை என்றாலும் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வாசாஆ 2 ஆன உயிலானது வழக்கிற்காக தாக்கல் செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. நான் பிரதிவாதிகளிடம் தாவா சொத்தில் பங்கு வேண்டும் என கேட்டேனா என்றால் இல்லை. இந்த வழக்கு சம்பந்தமாக நான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேனா என்றால் அனுப்பினேன். நான் வழக்கறிஞர் அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை என்றால் சரியல்ல. நான் அந்த வழக்கறிஞர் அறிவிப்பை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். நான் பிரதிவாதிகளிடம் சென்று சொத்தில் பங்கு கேட்டேன் என்றாலும், அடியாட்களை வைத்து மிரட்டினேன் என்றாலும், பிரதிவாதிகள் பங்கு தர மறுத்ததால் பொய்யான ஆவணத்தை தயார் செய்து நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

5. வாசாஆ 1 ஆன ஆவணத்தை பதிவு செய்துள்ள நிலையில் எனது

தாத்தா வாசாஆ 2 ஆன ஆவணத்தை எழுதிவைத்திருந்தால் அதையும் பதிவு செய்திருப்பார் என்றால் சரியல்ல. 1974ல் எழுதப்பட்ட உயில் ஆவணத்தில் சொத்து விபரங்கள் எதுவும் குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான். அந்த உயில் ஆவணத்தின் அடிப்படையில் எனது பெயரில் பட்டா, சிட்டா மற்றும் அடங்கல் எதுவும் ஏற்பட்டுள்ளதா என்றால் இல்லை. எனது தாத்தாவிற்கு இறுதி சடங்குகளை அவரது மகன்கள் செய்துள்ள நிலையில் சொத்துகளை அவர்களுக்கு கொடுக்காமல் எனது தாத்தா எனக்கு கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. நான் வழக்கு தாக்கல் செய்வதற்கு எந்த முகாந்திரமும் இல்லை என்றாலும், அதனால் எனது வழக்கு தள்ளுபடிக்குரியது என்றாலும் சரியல்ல.